DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KANGAYAM**

| | | |
|---|---|---|
| Calender | : | |
| 2015Miscellaneous | : | STC 13 / 2019 |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution |
| | | Defence **DW1** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அருண்குமார் | தொழில் | : | சுயதொழில் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | துரைசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | சுக்கிட்டி பாளையம் | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 08.10.2021.

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

. ஸ்ரீ பொன்னழகு எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனம் தொழில் கூட்டு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நிறுவனத்திற்கு பதிவு சான்று பெற்ற பின்பு, கூட்டாண்மை ஒப்பந்தம் ஏற்படுத்தியிருக்கிறோம் என்றால் இல்லை. கூட்டாண்மை ஒப்பந்தத்தில் பக்க எண்.4, 8 வது பாராவில் ஸ்ரீ பொன்னழகு எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்திற்காக தனிப்பட்ட முறையில் காசோலை கொடுத்து கொள்ளலாம் என்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கு தாக்கல் செய்த பின் ஏற்பட்டவை என்றால் சரிதான். நாகரத்தினத்திற்கும், நான் தாக்கல் செய்துள்ள வழக்கு ஆவணங்களுக்கும் எத்தகைய சம்மந்தமும் இல்லை என்றால் எனக்கும் நாகரத்தினத்திற்கும்

இடையில் எத்தகைய சம்மந்தமும் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் அருண்குமாருக்கு தொடர்புடையவை என்றாலும், புகார்தாரருக்கு தொடர்புடையவை இல்லை என்றாலும், சரியல்ல. நான் வழக்கிலிருந்து தப்பித்துக்கொள்ள பொய்யாக விவாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் மனுதாரரிடம் கடன் பெற்றுக்கொண்டு, காசோலை கொடுத்து மோசடி செய்து விட்டு, தற்போது பொய்யாக வழக்காடுகின்றேன் என்றால் சரியல்ல. நான் காசோலை தொகைக்கு கட்டுப்பட்டவன் என்றாலும், பொய்யாக ஆவணங்கள் தயார் செய்து தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு காசோலை உள்ள வங்கி கணக்கை இரண்டு வருடங்களாக எத்தகைய பரிவர்த்தனையும் செய்யவில்லை என்றால், எனக்கு வங்கி கணக்கில் பரிவர்த்தனை தேவை எதுவும் ஏற்படாததால், செய்யவில்லை. நான் புகார்தாரருக்கு காசோலை தொகையை செலுத்த கடமைப்பட்டவன் என்றாலும், எனவே வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. வழக்கு காசோலையில் ஸ்ரீ பொன்னழகு எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் Authorized Signatory என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.நான் நிறுவனத்திற்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பையும் நான் தான் வாங்கியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் நான் பார்ட்னர் என்றோ, உரிமையாளர் என்றோ குறிப்பாக எத்தகைய மறுப்பும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. காசோலை மோசடியாக பயன்படுத்தப்பட்டது தொடர்பாக அருண்குமார் மீது நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் அளித்திருக்கிறேனா என்றால் இல்லை. நீதிமன்றத்திலும், தனியாக புகார் எதுவும் அளித்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் வழக்கறிஞர் அறிவிப்பினை வழக்கு தாக்கல் செய்து இரண்டு மாதம் கழித்து, அனுப்பியிருக்கிறேன் என்றால் சரிதான். எனக்கு உடல் நிலை சரியில்லை. எனக்கு உடல்நிலை சரியில்லாத விபரம் எதையும் அறிவிப்பில்

<u>STC 13 / 2019 நாள். 08.10.2021 DW1. குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் புகார்தாரருக்கு காசோலை கொடுத்து மோசடி செய்ததால் மனு அனுமதிக்கப்பட வேண்டுமென்றால் சரியல்ல.